**கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகாரசபை - 2022**

-----------------------------------------------------------------------------

**1. நிதிக் கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகாரசபையின் (''அதிகாரசபை'') 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, அதிகாரசபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கூட்டுத்தாபனம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கூட்டுத்தாபனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை

எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் அடிப்படையின் மீது கணக்கீடு செய்தல் மற்றும் கூட்டுத்தாபனம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துதல் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- அதிகாரசபையின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கூட்டுத்தாபனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். அத்துடன் அந்த வெளிப்படுத்தல்கள் போதியளவினதாக காணப்படாவிடின் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மீது தொடர்ந்தியங்கும் நிலைமை முடிவடையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- அதிகாரசபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- அதிகாரசபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கூட்டுத்தாபனம் இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.5.1 நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொது மற்றும் குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்துடன் செயற்படுத்தல் உரிய அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்காக கணக்களிதன்மையை பேணிச் செல்லல், முகாமைத்துவத்தினால் பொது மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் கூடிய சொத்துக்களுக்கு மாத்திரம் சொத்துக்களை அணுகுதல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களி தன்மை காணப்படும் சொத்துக்களுடன் நியாயமான காலப் பகுதியில் சீராக்கல் மற்றும் வேறுபாடுகள் காணப்பட்டால் அது தொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுத்தல் போன்றவற்றிற்கான நியாயமான உறுதிப்படுத்தல் ஒன்றை பெற்றுக்கொள்வதற்கு போதியளவு ''முறையாக திட்டமிடப்பட்ட'' உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையொன்றினை நிறுவனத்தினால் பராமரித்துக்கொள்வது அவசியமாக உள்ளது.

#### 1.5.2 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணக்கமின்மை

| | உரிய நியமங்களுடன் தொடர்பு மற்றும் இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் படி தொட்டுணர முடியாத சொத்துக்களை பெறுமானத் தேய்வு செய்வதற்குரிய கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும், அதிகார சபையின் ரூபா 820,826 தொகைக்கான தொட்டுணர முடியாத சொத்துகள் பெறுமானத் தேய்வு மேற்கொள்ளல் தொடர்பாக கணக்கீட்டுக் கொள்கைகள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆண்டின் இறுதிக் கணக்குகளில் கொள்கைள் வெளிப்படுத்தப்படும். | கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க குறிப்பிட்ட பெறுமானத் தேய்வுக் கொள்கை வெளிப்படுத்த வேண்டும் என. |
| (ஆ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 03 இன் 47 பந்தியின் படி முன்னைய காலப் பகுதிக்குரிய தவறுகள் கண்டுபிடிக்கப்பட்ட பின்னர் வெளியிடப்படுவதற்காக அங்கீகரிக்கப்பட்டுள்ள முதலாவது நிதிக் கூற்றுத் தொகுதியில் தவறு ஏற்பட்டிருந்த காலப் பகுதிக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஒப்பீட்டு ரீதியான பெறுமதிகள் மீண்டும் வெளியிடுவதன் மூலம் அவை கடந்த காலத்திற்கு பொருத்தமானவாறு சரி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், (Re – State), ரூபா 1,691,149 தொகைக்கான முன்னைய ஆண்டிற்குரிய சீராக்கல்கள் உரிமை மூலதன மாற்றங்கள் கூற்றில் சீராக்கல் செய்திருக்கவில்லை. | 2023 ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது சீராக்கல்கள் மேற்கொள்ளப்படும். | கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தவறுகளை திருத்துவது தொடர்பான சித்தரிப்புக்கள் நிதிக் கூற்றுக்களில் மேற்கொள்ள வேண்டும் என. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் 65 பந்தியின் படி மிகுதிப் பெறுமதி மற்றும் பயன்படுத்தப்பட்ட ஆயுட்காலம் அனைத்து அறிக்கையிடும் காலப் பகுதி முடிவிலும் மீளாய்வு செய்து உரிய வித்தியாசங்கள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 03 இன் படி கணக்கீடு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், அதிகார சபையின் பெறுமானத் தேய்வு கழிக்கப்பட்டு முடிவடைந்திருந்த போதிலும் தற்போது பயன்படுத்தப்படும் நிதிக் கூற்றுக்களில் குறிப்பு இலக்கம் 05 இன் கீழ் காட்டப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 6,052,525 தொகை சொத்துக்கள் தொடர்பாக நியமத்திற்கு இணங்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நியம இலக்கம் 7 இன் பிரகாரம் மீள்மதிப்பீட்டுப் பெறுமதி உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க சொத்துக்களின் பெறுமானத் தேய்வு தொடர்பாக செயற்பட வேண்டும் என. |
| (ஈ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 11 இன் 44 பந்தியின் படி ''சொத்தொன்றென இனங் காணப்பட்ட'' பரிமாரப்படாத கொடுக்கல் வாங்கல் ஒன்றின் மூலம் வளங்களில் உட்பாய்ச்சல் வருவாய் ஒன்றென இனங் காண வேண்டியிருந்த போதிலும் 2017 மற்றும் 2021 ஆண்டுகளின் போது அமைச்சிலிருந்து அதிகார சபைக்கு கிடைத்திருந்த நிலையான சொத்துக்களின் பெறுமதியாகிய ரூபா 1,888,677 தொகை அதன்படி கணக்கீடு செய்திருக்கவில்லை. அந்த சொத்துக்களின் பெறுமதி நடைமுறை அல்லாத சொத்தொன்றென மீளாய்வாண்டின் நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்பட்டிருந்ததுடன், முன்னைய ஆண்டிற்கான சீராக்கல் ஒன்றென காட்டப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆண்டின் போது கணக்கீட்டு நியமங்களின் படி நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கீட்டு நியம இலக்கம் 11 இன் படி மானியங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என. |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வியாபாரக் கடன்பட்டோர், ஊழியர் கடன் மற்றும் பெற வேண்டிய மீதி கூட்டுத்தொகை ரூபா 2,889,460 தொகையினால் குறைவடைதல், தொழில்படு மூலதனத்தில் மாற்றங்கள் என கணிக்காமல் அதனை | இது முதலீட்டுத் தொழில்பாடுகள் மீது காசுப் பாய்ச்சலின் வட்டி பெறுவனவுகள் மூலம் சீராக்கல் மேற்கொள்ளப்பட்டது. | கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட வேண்டும். |

முதலீட்டுத் தொழில்பாடுகளின் கீழ் காசுப்பாய்ச்சல் கூற்றில் காட்டப்பட்டிருந்தது.

### 1.5.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| | விடயம் | தொகை ரூபா | சமர்ப்பிக்கப் படாத கணக்காய்வு சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | குறுகிய கால முதலீடுகள் | 4,483,154 | மீதிகளை உறுதிப்படுத் தல் | மீதிகளை உறுதிப்படுத்துவதற்காக கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. | மீதிகளை உறுதிப்படுத்தல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என. |
| (ஆ) | கடன் கொடுத்தோர் மீதிகள் | 294,689 | மீதிகளை உறுதிப்படுத் தல் | மீதிகளை உறுதிப்படுத்துவதற்காக கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. | மீதிகளை உறுதிப்படுத்தல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | பெற வேண்டிய மீதிகள் | 387,981 | மீதிகளை உறுதிப்படுத் தல் | மீதிகளை உறுதிப்படுத்துவதற்காக கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. | மீதிகளை உறுதிப்படுத்தல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என. |

## 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெற வேண்டிய தொகை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அதிகார சபையின் விடயப்பரப்பில் அடங்காத கருமம் ஒன்றான கம்பஹா மற்றும் நீர்கொழும்பு வைத்தியசாலைகளில் பம்பு அறைகள் பராமரிப்புக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ள ஊழியர்களின் சம்பளம் மற்றும் சேவைக் கட்டணம் மீளளிப்பாக மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய ரூபா 8,285,287 இற்கான மீதியில் ரூபா 5,940,770 இற்கான மீதியொன்று 2018 ஆண்டு முதல் பராமரிப்பு அலுவல்களுக்காக நிறுத்தப்பட்டிருந்த நீர்கொழும்பு வைத்தியசாலையில் இருந்து அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட போதிலும், மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு 5 வருட | நீர்கொழும்பு வைத்தியசாலையிலிருந்து பெற வேண்டிய ரூபா 5.94 மில்லியன் நிலுவைத் தொகையை பெற்றுக்கொள்வதற்காக சுகாதார சேவை அமைச்சுடன் நடாத்தப்பட்ட கூட்டத்தின் படி குழு ஒன்று நியமனம் செய்யப்பட்டுள்ளது. குழு அறிக்கையின் படி நிலுவைத் தொகையை செலுத்துவதற்கு இணங்கப்பட்டுள்ளது. | பெற வேண்டிய மீதிகள் விரைவாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என. |

| | | | |
|---|---|---|---|
| | காலம் கடந்திருந்த போதிலும் அதனை தீர்த்திருக்கவில்லை. | | |
| (ஆ) | 2022 திசெம்பர் 31 உள்ளவாறு காணப்பட்ட கூட்டுத்தொகை ரூபா 3,971,005 தொகைக்கான பெற வேண்டிய மீதியில் மாதிவல பாராளுமன்ற வீடமைப்பு தொடர் கட்டிடத்தின் பராமரிப்பு அலுவல்களுக்காக பாராளுமன்ற செயலகத்திலிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 882,922 தொகையும், 159 கூட்டு ஆதன ஆதனங்களில் இருந்து ஒப்புக்கொள்ளப்பட்ட கட்டணம் ரூபா 2,668,305 தொகை மற்றும் ஜல்தர அரசாங்க ஊழியர் வீட்டு தொடர் கட்டிடத்தில் 53 வதிவோரிடம் அறவிடப்பட வேண்டிய ரூபா 419,775 தொகையும் காணப்பட்டது. இந்த கடன் பட்டோர் மீதியில் 05 வருடங்களுக்கு மிகையான காலம் முதல் அறவிடப்படாமல் காணப்படும் பெற வேண்டிய மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 3,088,083 தொகையாக இருந்தது. | ஒப்புக்கொள்ளப்பட்ட கடன் பட்டோர் மீதியை அறவீடு செய்வதற்கு முடியாமல் இருந்தமையால் ஏடுகளில் இருந்து பதிவழிப்பதற்கு பரிந்துரைகள் பெற்றுக்கொள்வதற்காக பொது முகாமையாளர் (சட்டம்) தலைமைத்துவத்தில் குழுவொன்று நியமனம் செய்யப்பட்டுள்ளது. இந்த குழுவின் அறிக்கையின் படி தொடர் நடவடிக்கை எடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. | கடன் மீதிகளை விரைவாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபனக் கோவையின் II ஆம் அத்தியாயம் இன் 13.3 | பதில் கடமை நியமனம் ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டியது நிரந்தர நியமனம் வழங்கும் வரை தற்காலிக செயற்பாடொன்றென மாத்திரம் இருந்த போதிலும் அதிகார சபையின் 03 உத்தியோகத்தர்களினால் 02 வருடங்களுக்கு மிகையான காலம் பதில் கடமை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | இந்த நிறுவனத்தின் வெற்றிடங்கள் தொடர்பாக 2023 மார்ச் 10 திகதிய கடிதத்தின் மூலம் அமைச்சுச் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | தாபனக் கோவையின் அறிவுரைகளின் படி செயற்பட வேண்டும் என. |
| (ஆ) | 2021 நவம்பர் 16 திகதிய 1/2021 இலக்கம் கொண்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கையில் | அரச கூட்டுத்தாபனம் ஒன்றின் மிகை நிதியம் முதலீடு செய்தல் தொடர்பாக நிதியமைச்சரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ள | நிலையான வைப்புக்களில் முதலீட்டுக்கான அங்கீகாரம் கோறி வரிசை அமைச்சுச் செயலாளர் மூலம் நிதியமைச்சுச் செயலாளருக்கு 2023 | சுற்றறிக்கை அறிவுரையின் படி முதலீடு தொடர்பாக நடவடிக்கை எடுக்க |

| | | | | |
|---|---|---|---|---|
| | பொது முயற்சிகள் தொடர்பான வழிகாட்டல்களின் பந்தி 6.2 (இ) | வேண்டியிருந்த போதிலும், அதிகார சபையினால் மீளாய்வாண்டின் போது முதலீடு செய்யப்பட்டிருந்த ரூபா 544,601,929 இற்கான 05 நிலையான வைப்புக்கள் தொடர்பாக அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை. | மார்ச் 16 திகதி கடிதமொன்று அனுப்பப்பட்டது. | வேண்டும். |
| (இ) | 2021 நவம்பர் 16 திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் செயற்பாட்டுக் கைநூல் | | | |
| | (i) அத்தியாயம் 3 பந்தி 3.2 | பொது முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த நிறுவனத்தின் மூலோபாயத் திட்டம் மற்றும் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படி ஊழியர்களின் செயலாற்றலை அளவீடு செய்வதற்காக தயாரிக்கப்பட்டிருந்த செய்முறையொன்றின் மூலம் உறுதிப்படுத்த வேண்டியிருந்த போதிலும் அதிகார சபை எவ்வித மதிப்பீட்டு செய்முறையொன்று இன்றி மீளாய்வாண்டிற்காக ரூபா 7,517,703 இற்கான ஊக்குவிப்புக் கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தது. | 2022 தயாரிக்கப்பட்ட ஊழியர் செயலாற்றுகையை மதிப்பீடு செய்வதற்கான துறைசார் செயற்பாட்டு சுட்டிகளின் வரைவு ஒன்று வீடமைப்பு அமைச்சுச் செயலாளரின் மூலம் பொது முயற்சிகள் திணைக்களத்தின் அங்கீகாரத்திற்காக அனுப்பப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் அறிவுரையின் படி செயலாற்றுகை மதிப்பாய்வு மேற்கொள்ளப்பட வேண்டும். |
| | (ii) அத்தியாயம் 5 பந்தி 1 | பொது முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தின் மூலோபாய திட்டம் தயாரிக்கும் போது பிரதான செயலாற்றுகை சுட்டிகள் இனங்காணப்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டு இறுதி வரை குறிப்பிட்ட சுட்டிகள் இனங்கண்டிருக்கவில்லை. | 2023 ஆண்டின் போது அதற்காக உசாத்துணை சேவையொன்று பெற்று முறையான துறைசார் செயல் சுட்டிகள் தயாரிக்கப்பட்டு வருகின்றது. | சுற்றறிக்கை அறிவுரையின் படி செயலாற்றுகை சுட்டிகளை இனங் காண்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | 1978 இன் 11 இலக்க பிணைக்கப்பட்ட வீடுகளின் உரிமைச் | 2010 முதல் 2022 ஆண்டு வரை பாதி அல்லது தற்காலிக கூட்டு ஆதன | 2010 – 2022 வரை இறுதிச் சான்றிதழ் பெற்றுக்கொள்ளாத 70 | கூட்டு ஆதனச் சான்றிதழ் வழங்கல் |

| | | | |
|---|---|---|---|
| சட்டத்தின் 5(2) | சான்றிதழ் பெற்றிருந்த 70 கூட்டு ஆதனங்களுக்காக உள்ளூராட்சி நிறுவனங்களில் இருந்து இணக்க சான்றிதழ்கள் பெற்றுக்கொண்டிருக்காமையால் இறுதி கூட்டு ஆதன சான்றிதழ் வழங்கப்பட்டிருக்கவில்லை. அதில் பாதி அல்லது தற்காலிக சான்றுகள் பெற்றுக்கொண்டு 3 வருடங்கள் கடந்துள்ள 54 ஆதனங்களும் காணப்படுகின்றன. இணக்க சான்றிதழ் ஒன்றின்றி கூட்டு ஆதனம் ஒன்றில் வதிவதற்கு முடியாதிருந்த போதிலும் அது தொடர்பாக பின் தொடர் நடவடிக்கை ஏதும் அதிகார சபையினால் மேற்கொண்டிருக்கவில்லை. | ஆதனங்கள் தொடர்பாக வெளிக்கள பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. வருட இறுதியளவில் கூட்டு ஆதனச் சான்றிதழ் பெற்றுக்கொள்ளப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. | தொடர்பாக சட்ட விதிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் அதிகார சபையின் வரிக்கு முன்னரான மிகை ரூபா 131,259,446 தொகையாக காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் வரிக்கு முன்னரான மிகை ரூபா 206,261,702 தொகை காணப்பட்டது. அதன்படி, நிதி விளைவுகளில் ரூபா 75,005,256 இற்கான பின்னடைவொன்று அவதானிக்கப்பட்டது. இந்த பின்னடைவிற்கு செயற்பாட்டு வருமானம் ரூபா 154,280,446 தொகையினால் குறைவடைதல் பிரதானமான காரணமாக இருந்தது.

### 2.2 பிரதான வருமானங்கள் மற்றும் செலவு விடயங்களின் போக்குப் பகுப்பாய்வு

(அ) மீளாய்வாண்டின் அதிகார சபையின் செயற்பாட்டு வருமானம் 2021 ஆண்டிற்கு ஒப்பாக ரூபா 154,280,446 தொகை எனப்படும் 45 சதவீதத்தினால் குறைந்திருந்தது. இதற்காக நிர்மாணிக்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டிருந்த ஆதனங்களுக்காக வழங்கப்பட்ட சான்றிதழ் வருமானம் ரூபா 138,089,972 தொகையினால் அதாவது 56 சதவீதத்தினால் மற்றும் கூட்டு ஆதன சான்றிதழ் (ஆரம்ப இசைவு) வழங்கும் வருமானம் ரூபா 52,853,747 தொகையினால் அதாவது 101 சதவீதத்தினால் குறைவடைதல் காரணமாக இருந்தது.

(ஆ) நேர் செலவு முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது ரூபா 1,908,287 தொகையினால் அதிகரித்திருந்தது. இதற்காக கூட்டு ஆதன சான்றிதழ் வழங்கும் செலவு ரூபா 487,663 தொகை மற்றும் ஒப்புக்கொள்ளப்பட்ட கட்டணம் ரூபா 1,281,594 இனால் அதிகரித்தல் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2017 ஜுலை 05 திகதிய அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தலின் படி கூட்டு ஆதன அபிவிருத்திக்காக வழங்கப்படும் ஆரம்ப விடுவித்தல் கடிதத்தில் செல்லுபடியாகும் காலம் 03 வருடங்கள் மாத்திரம் காணப்பட்ட போதிலும், 2011 ஆண்டு முதல் 2022 ஆண்டு வரையான காலப் பகுதியில் பாதி அல்லது தற்காலிக கூட்டு ஆதனச் சான்றிதழ்கள் பெற்றிருந்த 71 ஆதனங்களுக்காக இறுதி கூட்டு ஆதன முகாமைத்துவ சான்றிதழ் பெற்றிருக்கவில்லை. | ஆரம்ப இசைவு கடிதத்தை புதுப்பித்து இறுதி சான்றிதழ் வழங்குவதற்கு 2023 ஆண்டு முதல் செயற்படுத்தப்படும். | கடிதங்களின் செல்லுபடியாகும் காலம் முதல் சான்றிதழ் வழங்குவதற்கு முறையான செய்முறையொன்று தயாரித்துக்கொள்ள வேண்டும். |
| (ஆ) | கூட்டு ஆதனங்கள் தொடர்பாக அதிகார சபைக்கு 2013 ஆண்டு முதல் 2022 ஆண்டு வரை கிடைத்திருந்த 87 முறைப்பாடுகள் 2022 திசெம்பர் 31 திகதி வரை தீர்த்திருக்கவில்லை. இந்த முறைப்பாடுகளில் அங்கீகாரமற்ற நிர்மாண வேலைகள் தொடர்பான முறைப்பாடுகள் 27 உம், நீர் ஒழுகல் தொடர்பான முறைப்பாடுகள் 22 உம், காணப்பட்டதுடன், அவற்றில் 10 முறைப்பாடுகள் கிடைத்து 2 – 4 வருடங்களுக்கு இடைப்பட்ட காலம் கடந்திருந்த காரணத்தினால் ஆதனங்களுக்கு மற்றும் உயிர்களுக்கு ஆபத்து நிலைமை ஒன்றை அடையக் கூடியதாக இருந்ததென அவதானிக்கப்பட்டது. இவற்றில் 4 முறைப்பாடுகள் கிடைத்து 5 வருடங்களுக்கு மிகையான காலமும், 39 முறைப்பாடுகள் கிடைத்து 3 வருடங்களை மிகையான காலமும் 19 முறைப்பாடுகள் கிடைத்து ஒரு வருடத்தை மிகையான காலமும் கடந்திருந்தது. மேலும், ஆதனங்கள், நில அளவைப் | அதிகார சபைக்கு கிடைத்திருந்த 87 முறைப்பாடுகளில் 28 தொகை 2023 ஏப்ரல் அளவில் தீரக்கப்பட்டது. மீதியானவை பல்வேறு காரணங்களினால் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | கூட்டு ஆதன ஆதனங்கள் தொடர்பாக கிடைக்கும் முறைப்பாடுகளை விரைவாக தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | படங்கள் பதிவு செய்யாமை தொடர்பாக 15 முறைப்பாடுகளும் காணப்பட்டது. மேலும், அதிகார சபையினால் விசாரணை செய்யப்பட்டிருந்த அங்கீகாரமற்ற நிர்மாண வேலைகள் தொடர்பான 05 முறைபாடுகளுக்கு கட்டளைகள் வழங்கப்பட்டிருந்த போதிலும், அந்த கட்டளைகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. அதிகார சபைக்கு முறைபாடொன்று கிடைத்த பின்னர் முறைப்பாட்டாளருக்கு மற்றும் எதிர்மனுதாரருக்கு பிரிவு 9 அ(1) இன் கீழ் அறிவித்தல் ஒன்று வழங்க வேண்டியிருந்த போதிலும், கிடைத்திருந்த 9 முறைப்பாடுகள் தொடர்பாக அறிவித்தல் வழங்குவதற்கு 3 மாதங்களுக்கும் 3 வருடங்களுக்கு இடைப்பட்ட காலம் கடந்திருந்தது. | | |
| (இ) | 2003 இன் 24 இலக்க பொது வசதிகள் சபையின் (திருத்திய) சட்டத்தின் 5(உ) இன் படி கூட்டு ஆதன ஆதனங்களுக்காக நிறுவப்படுகின்ற முகாமைத்துவ நிறுவனங்களின் அலுவல்களை முகாமைத்துவம் செய்தல் மற்றும் கட்டுப்படுத்தல் அதிகார சபையினால் மேற்கொள்ளப்பட வேண்டும். இதன்படி, அதிகார சபையினால் 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 978 முகாமைத்துவ நிறுவனங்கள் நிறுவப்பட்டிருந்த போதிலும், 2022 திசெம்பர் 31 திகதி அளவில் அவற்றில் 457 தொகை செயற்படாமல் இருந்தது. இதன்படி, அதிகார சபையினால் முகாமைத்துவ நிறுவனங்கள் முறைப் பிரகாரம் ஒழுங்குறுத்தியிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. | நாட்டில் நிலவிய பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடியினால் 2022 ஆண்டில் செப்தம்பர் வரை கூட்டங்கள் நடாத்துவதற்கு முடியாமல் இருந்தது. | சட்டத்தின் ஏற்பாடுகளின் படி முகாமைத்துவ நிறுவனங்கள் தொடர்பாக முறையான மேற்பார்வையொன்று மேற்கொள்ள வேண்டும். |
| (ஈ) | 1977 ஆண்டு முதல் அதிகார சபை அலுவலகம் பேணப்பட்டு வந்திருந்த போதிலும் அதற்காக தேசிய வீடமைப்பு அதிகார சபையுடன் உடன்படிக்கையொன்று | தேசிய வீடமைப்பு அதிகார சபையுடன் இணக்கப்பாடொன்று மேற்கொண்டு வாடகை உடன்படிக்கை கையொப்பமிடப்படும். | முறையான நிபந்தனைகள் உள்ளடக்கிய உடன்படிக்கையொன்றுக்கு அணுக வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அணுகியிருக்கவில்லை. எவ்வாறாயினும், வருடாந்த வாடகை 2021 ஆண்டு முதல் ரூபா 4,848,660 தொகை முதல் ரூபா 8,400,000 தொகை வரை அதிகரித்திருந்தது என அவதானிக்கப்பட்டது. | | |
| (உ) | கூட்டு ஆதன சட்டத்தின் கீழ் காணப்படும் 1982 இன் 45 இலக்க பிணைக்கப்பட்ட வீடுகள் (திருத்திய) சட்டத்தில் காணப்பட்ட பிரதான நியதிச் சட்டத்தின் அட்டவணை 3 பிரிவு (2) பிரகாரம் முகாமைத்துவ நிறுவனங்களின் வருடாந்த பொதுக் கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டியிருந்ததுடன், அதன் 8(4)(அ) இன் படி முகாமைத்துவ நிறுவனத்தின் கணக்காய்வு செய்யப்பட்ட வருடாந்த நிதிக் கூற்றுக்களின் பிரதியொன்று அதிகார சபைக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். எனினும், 2022 ஆண்டிற்கான 269 நிறுவனங்களினால் வருடாந்த கூட்டங்கள் நடாத்தி கணக்காய்வு செய்யப்பட்ட வருடாந்த அறிக்கைகள் அதிகார சபைக்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | நாட்டில் நிலவிய பொருளாதார அரசியல் நெறுக்கடியினால் பொதுக் கூட்டங்கள் நடாத்தப்படாமையால் குறிப்பிட்ட ஆண்டுகளுக்கான வருடாந்த கணக்காய்வு அறிக்கை அதிகார சபைக்கு சமர்ப்பித்தலில் தாமதம் ஏற்படல் அல்லது வழங்குவதற்கு முடியாமல் போனது. | முகாமைத்துவ நிறுவனங்களின் வருடாந்த கணக்குகளை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஊ) | எட்மன் எட்மன்டன் அரச ஊழியர்களுக்கான வீட்டு தொடர் கட்டிடங்கள் பராமரிப்பு நிதியம் ஆகிய ரூபா 6,800,000 தொகை அந்த வீட்டுத் தொடர் கட்டிடத்தின் கூட்டு ஆதன நில அளவைப் படம் பதிவு செய்து சட்ட ரீதியாக முகாமைத்துவ நிறுவனம் நிறுவும் வரை இரு தரப்பினரின் இணக்கத்துடன் 2011 ஆண்டின் போது கூட்டுக் கணக்கொன்றில் வைப்புச் செய்யப்பட்டிருந்தது. இங்கு சட்ட ரீதியாக முகாமைத்துவ நிறுவனம் நிறுவப்பட்ட பின்னர் நிதி நிறுவாகம் தொடர்பாக முழுமையான பொறுப்பு முகாமைத்துவ நிறுவனத்திற்கு சாட்டப்பட்டு அதிகார சபை கூட்டுக் கணக்கிலிருந்து விலகுவதாக இணக்கம் | கூட்டு ஆதன ஆதன இலக்கம் 306 மற்றும் 308 எனும் 2 நில அளவைப் படங்கள் மூலம் பதிவு செய்து காணி உறுதிகள் வழங்கப்பட்டு வருவதுடன் தேசிய வீடமைப்பு அதிகார சபையினால் அறிவிக்கப்பட்டுள்ளதுடன், எதிர் காலத்தில் சட்ட ரீதியான முகாமைத்துவ நிறுவனம் நிறுவப்படும். | விரைவாக முகாமைத்துவ நிறுவனம் நிறுவப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்பட்டுள்ளது. எனினும், மீளாய்வாண்டு இறுதியளவில் 11 வருடங்களை மிகைத்திருந்த போதிலும் சட்ட ரீதியான முகாமைத்துவ நிறுவனம் நிறுவுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | |
| (எ) | கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகார சபைச் சட்டத்தின் திருத்தத்திற்குரிய 5 தொழிற்பாடுகள் 2022 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உட்படுத்தப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டு இறுதியளவிலும் சட்டம் திருத்தப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக உலகளாவிய போக்கினை அடிப்படையாக கொண்டு மேற்கொள்ளப்படுகின்ற கலப்பு கூட்டு ஆதன நிர்மாண வேலைகளுக்காக நடைமுறையில் உள்ள சட்டத்தின் ஏற்பாடுகளை பயன்படுத்த முடியாமல் காணப்படுகின்றது. | சட்டத்திக் திருத்தங்கள் தொடர்பான அமைச்சரவை விஞ்ஞாபனம் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சுச் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்ததுடன், அங்கீகாரம் கிடைத்த பின்னர் திருத்தங்கள் மேற்கொள்ளப்படும். | சட்டத்தில் தேவையாக திருத்தங்கள் விரைவாக மேற்கொள்ள வேண்டும். |

### 3.2 விளைவற்ற செலவுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அதிகார சபையின் பொது முகாமையாளர் பதவிக்காக உத்தியோகத்தர் ஒருவர் ஆட்சேர்ப்பதற்கு 2021 திசெம்பர் 12 திகதி மற்றும் 2021 திசெம்பர் 31 திகதி செய்தித் தாள் அறிவித்தல் வெளியிடுவதற்காக ரூபா 1.65 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. விண்ணப்பதாரர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்ட போதிலும், ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. 2022 ஜனவரி 01 திகதி முதல் ஜூன் 30 திகதி வரை பதில் கடமை உத்தியோகத்தர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டிருந்த போதிலும், அதன் பின்னர் பொது முகாமையாளர் காணப்படாமையால் 06 மாதங்களுக்கு மிகையான காலம் சட்டத்தின் 16 பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள பிரதான | செய்தித்தாள் அறிவித்தல் வெளியிடப்பட்டு 2022 பெப்ரவரி 10 மற்றும் 2022 நவம்பர் 19 திகதிகளில் நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்டது. எனினும், அதிகார சபையின் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடவடிக்கை முறைகளின் படி தகைமைகளை பூர்த்தி செய்துள்ள உத்தியோகத்தர் ஒருவரை தெரிவு செய்து நியமனம் வழங்குவதற்கு முடியாமல் இருந்தது. | ஆட்சேர்ப்பு நடவடிக்கை முறையின் படி அதிகார சபைக்கு தகைமையுடைய பொது முகாமையாளர் ஒருவர் நியமனம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| நிறைவேற்று பணிப்பொறுப்பு நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. 2023 ஜனவரி 20 திகதி மீண்டும் பதில் கடமை நியமனம் ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் நிரந்தர நியமனம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அதன்படி, மேற்கூறிய செய்தித்தாள் அறிவித்தலுக்காக செலவிடப்பட்டிருந்த தொகையும் விளைவற்ற செலவொன்றென அவதானிக்கப்பட்டது. | | |

### 3.3 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அதிகார சபையினால் பெறுகை செய்முறைகளுக்கு புறம்பாக 3 நிறுவனங்களில் இருந்து கூறுவிலைகள் பெறப்பட்டு ரூபா 1,209,436 இற்கான கட்டிடப் பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்துடன், பெறுகைக் குழு மற்றும் தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழு நியமனம் செய்யப்பட்டிருக்கவில்லை. பதிவு செய்யப்பட்டிருக்காத வழங்குனர்களிடமும் ரூபா 591,105 இற்கான காகிதாகிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன், பதிவு செய்யப்பட்ட வழங்குனர்கள் 27 பேர் காணப்பட்ட போதிலும், கணினி துணைக் கருவிகள் கொள்வனவு செய்வதற்காக ரூபா 114,264 தொகை செலவிடப்பட்டு செய்தித்தாள் அறிவித்தல் வெளியிடப்பட்டிருந்தது. | 2021 பதிவு செய்யப்பட்ட வழங்குனர்களின் குறைந்த கூறுவிலைகளின் படி கொள்வனவு செய்யப்பட்டது. அதிகார சபையின் நாளாந்த கடமைகளுக்கு தேவையான காகிதாகிகள் 2021 ஜூன் 17 திகதிய அமைச்சரவை பத்திரம் 21/1118/313/036 படி தனிப்பட்ட கூறுவிலை அழைப்பு மூலம் இலங்கை அரச பலவின கூட்டுத்தாபனத்தில் இருந்து கொள்வனவு மேற்கொள்ளப்பட்டது. அப்போதைய பதில் பொது முகாமையாளரினால் மென்பொருள் கிரயம் தனியாக குறிப்பிடப்பட்டு மீண்டும் கூறுவிலைகள் அழைக்கும் படி அறிவுரை வழங்கப்பட்டமையால் மீண்டும் கூறுவிலைகள் அழைப்பதற்கு ரூபா 114,264 தொகை செலவிடப்பட்டு 04 செய்தித்தாள் அறிவித்தல்கள் வெளியிடப்பட்டது. | பெறுகை திட்டத்தின் படி பெறுகை அலுவல்கள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.4 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கான அதிகார சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணி முறையே 138 மற்றும் 106 காணப்பட்டமையால் 32 | இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்காக ஆட்சேர்ப்பு செயற்பாடுகளை மீளாய்வு செய்வதற்காக நியமனம் செய்யப்பட்ட குழுவின் அங்கீகாரத்தை பெறுவதற்காக | அத்தியவசியமான பதவிகளை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வெற்றிடங்கள் காணப்பட்டதுடன், அவற்றில் 14 பதவியணி பதவி வெற்றிடங்கள் காணப்பட்டது. மேற்கூறிய 07 பதவியணி பதவிகள் 2010 ஆண்டு முதல் வெற்றிடமாக காணப்பட்டது. | 2023 மார்ச் 10 திகதி நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சுச் செயலாளருக்கு அனுப்பப்பட்டது. | |

## 3.5 வாகன முறைமை முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 மே 12 திகதி KU – 1233 இலக்கம் கொண்ட வாகனத்திற்கு ஏற்பட்டிருந்த வாகன விபத்து காரணமாக எஞ்சின் திருத்த வேலைக்காக அதிகார சபையினால் ரூபா 373,060 தொகை செலவிப்பட்டிருந்தது. சேதத்திற்கான காப்புறுதி நட்டஈடு என ரூபா 67,125 தொகை மாத்திரம் கிடைத்திருந்ததுடன், நி.பி. 104 விசாரணையின் படி வாகனத்தின் சாரதி குற்றவாளி என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், நி.பி. 104(4) படி முழுமையான அறிக்கையொன்று பெற்றிருக்காததுடன், விபத்தின் பின்னர் 22 மாதங்கள் கழிந்திருந்த போதிலும் அதிகார சபை ஏற்பட்டிருந்த நட்டத்தை மீளளிப்பு செய்திருக்கவில்லை. | முறையான ஒழுக்காற்று விசாரணை ஒன்றின் மூலம் சாரதி அனைத்துக் குற்றங்களில் இருந்தும் நிரபராதி என விடுவிக்கப்பட்டிருந்தார். அந்த தீர்மானத்திற்கு பணிப்பாளர் சபை இணங்கியிருந்தமையால் நட்டத்தை மீளளிப்பு செய்ய முடியாத நிலைமையொன்று காணப்பட்டது. | நி.பி. 104(4) படி முழுமையான அறிக்கையொன்று பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | அதிகார சபைக்கு சொந்தமான வாகனம் ஒன்று 2019 திசெம்பர் 19 திகதி விபத்துக்குள்ளாகியிருந்ததுடன், அந்த விபத்து காரணமாக ஏற்பட்டிருந்த திருத்த வேலைகள் 3 வருடங்க்ள கழிந்திருந்தும் மேற்கொண்டிருக்காததுடன், மதிப்பிடப்பட்ட திருத்த வேலை செலவு ரூபா 2,559,571 தொகை மீளாய்வாண்டு இறுதி அளவிலும் அறவீடு செய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | காப்புறுதி உள்ளடக்கம் ரூபா 5 இலட்சம் பெற்றுக்கொள்ள முடியுமாக உள்ளதுடன், மீதித் தொகையை ஏனைய தரப்பினரிடம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | வாகனத்தை திருத்துவதற்கு மற்றும் பொறுப்பு சொல்ல வேண்டிய தரப்பினரிடம் நட்டஈடு பெற்றுக்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என. |